**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 282/2018**

**PROSECUTION WITNESS NO. 2**

| | |
|---|---|
| **Name** : அந்தோணிசாமி | **Caste** : |
| **Father's/Husband Name** : செபஸ்தியான் | **Religion** : கிறிஸ்தவர் |
| **Village** : திருமலைராயபுரம் | **Calling** : விவசாயம் |
| **Taluk** : குளத்தூர் தாலுக்கா, புதுக்கோட்டை | **Age** : **53/2023** |

**(Accused 1,2 Present.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு** 3, **திருமதி. எம். உதயராணி,** தட்டச்சர்

**C.C.No. 282/2018 07.08.2023** **விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.35**

**முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 பூமா என்பவரை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது. **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** நாகராஜ் என்பவரின் வீட்டிற்கு அருகில் சாட்சி ரெங்கராஜ் குடியிருந்து வருகிறார். ரெங்கராஜை விவசாய வேலைக்கு அழைப்பதற்காக அவர் வீட்டிற்கு சென்றிருந்தேன்.

2. கடந்த 18.04.2013 ஆம் தேதி காலை 09.00 மணியளவில் ரெங்கராஜ் வீட்டிற்கு சென்றிருந்தபோது புதுக்கோட்டை மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் நாகராஜ் வீட்டில் இருந்தார்கள். நாகராஜ் என்பவரை எனக்கு தெரியும். நாங்கள் நாகராஜ் வீட்டிற்கு சென்று கேட்ட போது, பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு நாகராஜ் சென்றபோது அங்கு சுகுமார் என்பவர் பிறப்பு சான்று வாங்கி தருவதாக கூறினார் என்றும், அவர் பெற்று தந்த பிறப்பு சான்று போலியாக இருப்பதாகவும், அது சம்பந்தமாக போலீசார் விசாரணைக்காக வந்திருந்தார்கள் என்றும், என்னை சாட்சியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னுடன் ரெங்கராஜ் என்பவர் சாட்சியாக கையெழுத்து செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**C.C.No. 282/2018    07.08.2023**

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. மேற்படி நாகராஜ் வீட்டில் போலீசார் என்னை விசாரித்த பிறகு என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னை விசாரித்தது புதுக்கோட்டை போலீசார் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த ஆவணம் எழுதியிருந்ததா அல்லது எழுதாமல் இருந்ததா என்றால் எழுதியிருந்தது. நான் முதல் விசாரணையில் சொல்லிய விபரங்களை போலீஸ் விசாரணையின் போது நாகராஜ் சொன்னார் என்றால் சரிதான்.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

போதிய கால அவகாசம் கொடுத்தும் 2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.